**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : திரு.R.பாண்டி மகாராஜா.,B.Sc.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ம் நாள் செவ்வாய்கிழமை
**இ.ம.எண்.2/2024**
**அ.வ.எண்.36/2020**

கிருஷ்ணவேணி ...மனுதாரர்/3–ம் நபர்/உத்தேச 9–வது பிரதிவாதி

/எதிராக/

1. மாசானம்

.... எதிர்மனுதாரர்/வாதி

2. கலிபுல்லா
3. அம்மானுல்லா
4. நாகூர் மீரான் பீபி
5. சாபிர பீபி
6. வட்டார வளர்ச்சி அலுவலர், தாராபுரம்
7. திட்ட உதவி இயக்குனர், நகர ஊரமைப்பு, திருப்பூர்.
8. செயல் அலுவலர், கொளத்துபாளையம் பேரூராட்சி, தாராபுரம்.
9. செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், தாராபுரம்.

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 25.08.2025 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/3–ம் நபர்/உத்தேச 9–வது பிரதிவாதி தரப்பில் திரு.S.ஜெய்சங்கர்.,B.Sc.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.M.ராஜேந்திரபாபு.,M.Com.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1, விதி 10 மற்றும் பிரிவு 151–ன் படி அசல் வழக்கில் 9–வது பிரதிவாதியாக மனுதாரரை கட்சி சேர்க்க வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.09.02 16:11:21 +0530

**1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

இந்த மனுவின் அசல் வழக்கின் சொத்து விவரத்தின் செக்குபந்தியில் இந்த மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத்தடம் குறிப்பிடப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த பொதுத்தடத்தின் வழியாக இந்த மனுதாரர் மற்றும் ரீ.ச.எண்.944/1–ல் கட்டுப்பட்ட சொத்தினை கிரையம் பெற்ற பல நபர்கள் பயன்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும், அந்த பொதுத்தடத்தின் உரிமையானது மாண்புமிகு தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.110/2020–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை மூலம் தீர்ப்பாகியுள்ளது. எனவே, இந்த வழக்கில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பொதுத்தடம் குறித்து வாதி தாக்கல் செய்துள்ள இந்த அசல் வழக்கினை தீர்மானிப்பதற்கு இந்த மனுதாரர் அவசியமான தரப்பினராவார். எனவே, இந்த மனுவானது அசல் வழக்கில் மனுதாரரை தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**

இந்த வழக்கின் தாவா சொத்தின் மீது விளம்புகை பரிகாரம் மற்றும் 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிலைக்கால உறுத்துக்கட்டளை கோரியுள்ள நிலையில், இந்த மனுதாரரை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் அசல் வழக்கில் ஏற்படவில்லை. மேலும், அ.வ.எண்.110/2020–ல் ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினை தீர்ப்பாணை இந்த மனுவின் அசல் வழக்கின் சொத்தினை கட்டுப்படுத்தாது. இந்த மனுவின், மனுதாரர் எடுத்துரைத்துள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். மேலும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ரீ.ச.எண்.944/1 என்ற பூமியை மனையிடமாக மாற்றுவதற்கு இதன் அசல் வழக்கின் சொத்தினை பாதையாக மாற்றுவதற்காக மனுதாரர்கள் மற்றும் பூமியின்



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.09.02 16:11:29 +0530

உரிமையாளர்களும் முயற்சி செய்கிறார்கள். எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது சட்டத்திற்கு புறம்பானதாகும். ஆகவே, இந்த மனுவாது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது.

3. இரு தரப்பிலும் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?

இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

<u>5. தீர்வு:–</u>

இம்மனுவில் இருதரப்பிலும் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால், மனுவிலும், எதிருரையிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ள சங்கதிகளை மீண்டும் எடுத்துரைத்து வாதிடப்பட்டது.

5.1. இந்த மனுவில் தொடர்புடைய அசல் வழக்கானது தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேவேளையில், இந்த மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ரீ.ச.எண்.944/1 என்ற பூமிக்கு தாவா சொத்தான ரீ.ச.எண்.944/2A6–ல் கிழமேலாக அமைந்துள்ள தடமானது மறைக்கப்பட்டுள்ளது என இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அசல் வழக்கில் தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தில் மனுதாரருக்கு பாதை உரிமையானது மறைக்கப்பட்டுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கின் முடிவு மனுதாரரின் உரிமையை பாதிக்கும் வகையில் அமைந்துள்ள நிலையில் மனுதாரர் அசல் வழக்கில் அவசியமான தரப்பினராக இருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. எனவே, இந்த



PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.09.02 16:11:38 +0530

மனுவில் தொடர்புடைய அசல் வழக்கில் இந்த மனுதாரரை தரப்பினராக சேர்ப்பதற்கு அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும், அசல் வழக்கில் இடம்பெற்றுள்ள தாவா சொத்தினை பொறுத்து மற்ற சில வழக்குகள் ஏற்படுவதை தடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே, மேற்காணும் பரிசீலனையின் அடிப்படையில், இந்த மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுகிறது. இந்த மனுவில் செலவுத் தொகை எதுவும் உத்தரவிடப்படவில்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சசருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 02.09.2025–ம் தேதி கையெழுத்து செய்யப்பட்டது.

PANDI MAHARAJA RAMAIAH Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH Date: 2025.09.02 16:11:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

<u>**மனுதாரர் & எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி & சான்றாவணங்கள்**</u> **– இல்லை**

PANDI MAHARAJA RAMAIAH Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH Date: 2025.09.02 16:11:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
தாராபுரம்.

Fair order
I.A.No.2/2024
in
O.S.No.36/2020
02.09.2025
DMC, DPM